JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-6 Witness
for Prosecution

CC. No. 156/2025 Crime No. Station

| | | |
|---|---|---|
| Name | PW-6-அங்கப்பன் | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 21st day of January 2026 | | |

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317 மனு அளிக்கப்பட்டு, மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் முகாசிப்புதூரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை, சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மதியம் நான் முகாசிப்புதூர் யசோதா கடையருகில் நின்று கொண்டிருந்தபோது முன் தினம் அந்த இடத்தில் நடைபெற்ற வாகன விபத்து தொடர்பாக போலீசார் விபத்து நடைபெற்ற இடத்திற்கு வந்து விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அப்போது சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால், நானும் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.21 07:05:53 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-5  Witness
for Prosecution

CC. No. 156/2025 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW-5- ஆகாஷ் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 21st day of January 2026 | | | |

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317 மனு அளிக்கப்பட்டு, மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பூனாச்சி பேருந்து நிறுத்தம் அருகில் குடியிருந்து கொண்டு, கட்டிட வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம், நினைவில்லை சுமார் 2 - 1/2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதிய நேரத்தில் நான் பூனாட்சியிலுள்ள ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது இந்த விபத்தில் இறந்துபோன ஹரிஹரசுதன் என்பவர் அவரது இரு சக்கர வாகனத்தில் அந்தியூர் சாலையில் அம்மாபேட்டை நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது அம்மாபேட்டையிலிருந்து அந்தியூர் நோக்கி வந்த ஸ்பிளிண்டர் பைக் முன்னால் வந்த காரை முந்திச் செல்ல முயற்சித்தபோது எதிர் திசையில் வந்த ஹரிஹரசுதனின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டது. அந்த பைக் சற்று வேகமாக வந்தது விபத்தை ஏற்படுத்தியது. பைக்கில் இரண்டு பேர் வந்தார்கள். விபத்தை நேரில் பார்த்த நான் அருகில் சென்று பார்த்தபோது ஹரிஹரசுதனுக்கு மண்டையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு இருந்தது. விபத்தை ஏற்படுத்திய பைக்கை ஓட்டி வந்த நபருக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. எனக்கு அருகில் இருந்த நபர்கள் விபத்தை ஏற்படுத்திய பைக்கை ஓட்டி வந்த நபர் மது போதையில் இருந்ததாக கூறினார்கள். பின்னர் தனியார் ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் அடிபட்ட இருவரையும் அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். பைக்கை ஓட்டி வந்த நபரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். தற்போது அந்த நபர் நீதிமன்றத்தில் முன்னிலையில் இல்லை. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.21 07:05:59 +0530

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த நேரத்தில் சமயத்தில் நான் கடைக்குள் இருந்தேன் என்றால், சரியல்ல. நான் ஆட்டோ ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தேன்.  இந்த விபத்தில் இறந்துபோன நபர் எனது ஊரைச் சார்ந்தவர் என்றால், சரிதான்.  நான் விபத்தை சத்தம் கேட்டு தான் திருப்பி பார்த்தேன் என்றால், சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதையும் பார்க்கவில்லை என்றாலும், இந்த வழக்கின் இறந்துபோன நபர் எனது ஊரைச் சார்ந்தவர் என்பதால் காவல்துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரி சம்பவ சமயத்தின்போது குடித்திருந்தார் என்பது நேரடியாக எனக்கு தெரியாது என்றால், சரிதான். பக்கத்தில் இருந்தவர் சொல்லித்தான் எனக்கு தெரியும்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.21 07:06:07 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.